# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 36/2016
## PW15

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் |
| Father's/Husband's Name | : | பெருமாள் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.04.2025,
A1 to5 and 7 present.

**முதல் விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து பணிநிறைவு பெற்று தற்போது அல்லப்பனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . சம்பவ காலத்தில் தென்முடியனூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 07.01.2015 அன்று நான் பணிநிமித்தமாக திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் அலுவகத்திற்கு அலுவக பணிகளை முடித்துவிட்டு ராதாபுரம் கூட்ரோட்டிற்கு வந்தேன் . அப்போது தண்டராம்பட்டு காவல்நிலைய ஆய்வாளர் அக்காவல் நிலைய குற்ற எண். 3/2015 வழக்கு சம்மந்தமாக எதிரிகளை கைது செய்து அந்த இடத்தில் விசாரணை செய்துகொண்டிருந்தார். அப்போது என்னை அந்த வழக்கின் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அப்போது என்னுடன் ராதாபுரம் அகரம் கிராத்தை சேர்ந்த ஏழுமலை என்பவரும் இருந்தார். ஆய்வாளர் விசாரித்த எதிரிகளின் பெயர்கள் வேலு , த.பெ. பச்சையப்பன், பச்சையப்பன் த.பெ. சின்னசாமி, ராமசந்திரன் த.பெ முனுசாமி, தவமணி க.பெ. வேலு ஆகும். எதிரிகளை தற்போது அடையாளம் காட்ட முடியுமா என்று கேட்ட கேள்விக்கு சாட்சி தனக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டதால் பார்வை கோளாறு ஏற்பட்டகாரணத்தினால் மேற்படி நபர்களை சரியாக பார்த்து அடையாளம் காண்பிக்க முடியாது என்று கூறினார் . போலிஸ் விசாரணை செய்தபோது வேலு என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . அதை என் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்துகொண்டார் . அதில் அவர் பரசுராமன் என்பவரை கொடுவாள் மற்றும் உருட்டுகட்டையால் அடித்ததாகவும் சொன்னார் . என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல்

மகஜரில் நான் ராதாபுரம் கூட்ரோட்டில் கையொப்பம் செய்தேன் . அங்குதான் அந்த பொருட்களை போலிசார் காட்டினார்கள்.

**<u>சாட்சி கைப்பற்றிய இடத்தை சரியாக அடையாளம் காட்டாத காரணத்தால் அரசு தரப்பில் சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி வழங்கப்பட்டது.</u>**

என்னை போலிசார் விசாரித்தார்கள் . போலிஸ் விசாரணையில் தண்டராம்பட்டு காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்து எதிரி வேலு என்பவர் என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் தன்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தையும் , சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள் மற்றும் உருட்டுக்கட்டையை தாழனோடை பாலத்திற்கு அருகில் உள்ள மூட்புதரில்மறைத்து வைத்திருப்பதாகவும், அதை எடுத்துக்கொடுப்பதாகவும் கூறினார் என்றும் , அதை தொடர்ந்து எதிரி வேலு அந்த இடத்திற்கு ஆய்வாரையும் என்னையும் அழைத்து சென்றார் என்றும், இரவு 7.30 மணியளவில் எதிரி வேலு சுமார் 19 அங்குலம்நீளம் உள்ள அரிவாள் ஒன்றை அதன் கைப்பிடி 9 அங்குலம் உள்ளதையும், சுமார் 25 அங்குலம்நீளம் உள்ள உருட்டுக்கட்டை ஒன்றையும், சுமார் 32 அங்குலம்நீளம் உள்ள உருட்டுக்கட்டை ஒன்றையும் ஒப்படைத்தார் என்றும், அந்த இடத்தில் ஆய்வாளர் தயார்செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும் , ஏழுமலை என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சி அளிக்க வேண்டும் என்று எதிரி வேலுவை நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்காமல் கைப்பற்றிய இடத்தையும் குறிப்பிட்டு சொல்லாமல் உண்மைக்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ராதாபுரம் கிராமத்திற்கு என்று தனியாக கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் . இவ்வழக்கில் சாட்சியாக இருக்க போலிசார் சம்மன் கொடுத்து என்னை அழைக்கவில்லை . ராதாபுரம் கூட்ரோட்டில் நான் சென்றபோது ஆய்வாளர் எதிரிகளை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், எதிரி வேலு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் நான் தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல . போலிஸ் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.